இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முகாமைத்துவ கற்கைகள் பீடம்

இளமாணி முகாமைத்துவ கற்கைகள் சிறப்புப்பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்
மட்டம் 4

**AFU 4572 – பேரினப் பொருளியல்**

**இறுதிப் பரீட்சை – 2025 / 2026**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

---

*திகதி: 27, ஜூன் 2026* *நேரம்: மு.ப.9.30 – பி.ப.12.30*

---

*அறிவுறுத்தல்கள்:*

- இவ் வினாத்தாள் **ஆறு (06) வினாக்களைக்** கொண்டுள்ளது.
- ஏதேனும் **ஐந்து (05) வினாக்களுக்கு** விடையளிக்கவும். அனைத்து வினாக்களும் சமமான புள்ளிகளைக் கொண்டவை.
- உங்கள் **சுட்டெண்ணை** விடைத்தாளின் மேலே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதவும்.
- இவ் வினாத்தாள் **4 தட்டச்சு** செய்யப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது.
- விடைத்தாள்களை உங்கள் விடை புத்தகத்துடன் இணைக்கவும்.
- **நிரல்படுத்தப்படாத கணிப்பான்களின் (non-programmable calculator)** பயன்பாடு அனுமதிக்கப்படுகிறது.

### வினா இல. 01

**A)** "ஒரு வணிக முகாமையாளர் வினைத்திறன் மிக்க வணிகத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு பேரினப் பொருளியலில் ஆழ்ந்த அறிவு அவசியமாகும்". உங்கள் விளக்கத்தை, உள்நாட்டுப் பொருளாதாரத்தின் தற்போதைய பேரினப் பொருளியல் போக்குகளுடன் தொடர்புபடுத்தி விரிவாக விளக்கவும். **(10 புள்ளிகள்)**

**B)** பின்வரும் கூற்றுகளுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா என்பதை விளக்குங்கள். (தேவைப்படும் இடங்களில் விளக்கப்படங்களைப் பயன்படுத்தவும்)

**i.** பொருளாதார வளர்ச்சிச் செயற்திறனை (Economic Growth Performance) மேம்படுத்துவதற்கு விரிவாக்க நிதிக்கொள்கை மற்றும் நாணயக் கொள்கை (expansionary fiscal and monetary policies) என்பன பயன்படுத்தப்பட வேண்டும்.

**ii.** நிரம்பல் பக்கக் கொள்கைகள் (supply side policies) ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. **(10 புள்ளிகள்)**

### வினா இல. 02

**A) i.** மொத்தக் கேள்வியின் கூறுகள் (Components of Aggregate Demand) யாவை? ஒரு சுற்றோட்டப் பாய்ச்சல் படத்தைப் (circular flow diagram) பயன்படுத்தி, பிரதான பொருளாதாரத் துறைகளுக்கிடையே பணம், வளங்கள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் எவ்வாறு சுற்றோட்டமடைகின்றன (Circulate) என்பதைக் காட்டுக. **(06 புள்ளிகள்)**

ii. a. பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியையும் (Nominal Gross Domestic Product) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியையும் (Real Gross Domestic Product) வேறுபடுத்துக.

b.. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் நலனை அளவிடுவதற்கு மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி (R.G.D.P) ஏன் ஒரு சிறந்த அளவீடாகக் கருதப்படுகிறது? விளக்குக. **(06 புள்ளிகள்)**

**B)** பின்வருவனவற்றுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா என்பதை விளக்குக

**i.** வரிப் பெருக்கியானது (tax multiplier) எப்போதும் செலவுப் பெருக்கியை விடக் (expenditure multiplier) குறைவாகவே இருக்கும்

**ii.** பொருளாதாரத்தில் உள்ள துறைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, செலவுப் பெருக்கியின் பெறுமதியும் அதிகமாகும்.

**(08 புள்ளிகள்)**

<u>வினா இல. 03</u>

**A) i.** தேசிய வருமானத்தை (National Income) அளவிடுவதிலுள்ள பிரதான அணுகுமுறைகளை இனங்காண்க. **(03 புள்ளிகள்)**

**ii.** தேசிய வருமானத்தை அளவிடுவதில் உள்ள கட்டுப்பாடுகள் (limitations) யாவை? விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**B)** ஒரு மூன்று-துறை பொருளாதாரத்தின் (Three Sector Economy) விபரங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன; (விபரங்கள் ரூபா பில்லியன்களில்).

$C = 148 + bY_d$ (நுகர்வுச் சார்பு - *Consumption Function)*

$MPS = 0.2$ (எல்லை சேமிப்பு நாட்டம் - *Marginal Propensity to save)*

$I = 108$ (தன்னியக்க முதலீடுகள் - *Autonomous Investments)*

$T = 10$ (தன்னியக்க வரிகள் - *Autonomous Taxes)*

$G = 92$ (தன்னியக்க அரச செலவினம் - *Autonomous Government expenditure)*

**i.** நுகர்வுச் சார்பு (Consumption function) மற்றும் சேமிப்புச் சார்பு (Savings function) ஆகிய இரண்டையும் தனித்தனியாகப் பயன்படுத்தி தேசிய வருமானத்தின் (National Income - NI) சமநிலை மட்டத்தைக் கணிக்க. **(04 புள்ளிகள்)**

**ii.** தன்னியக்க வரிகளுக்கு மேலதிகமாக, அரசாங்கம் 10% வருமான வரியை அறிமுகப்படுத்தினால், தேசிய வருமானத்தின் (NI) புதிய சமநிலை மட்டத்தைக் காண்க.

**(03 புள்ளிகள்)**

**iii.** செலவுப் பெருக்கி மற்றும் வரிப் பெருக்கி (Expenditure and Tax Multiplier) ஆகியவற்றைக் கணிக்க. **(02 புள்ளிகள்)**

**iv.** இப்பொளாதாரம் திறந்த பொருளாதாரமாக மாறும்போது பின்வரும் மாற்றங்கள் ஏற்படுவதாகக் கொள்க

$X = 32$ (தன்னியக்க ஏற்றுமதிகள் - *Autonomous Exports)*

$M = 36 + 0.1Y$ (இறக்குமதிச் சார்பு - *Import Function)*

தேசிய வருமானத்தின் (NI) சமநிலை மட்டத்தைக் காண்க. **(04 புள்ளிகள்)**

**<u>வினா இல. 04</u>**

**A) i.** பண்டமாற்று முறையுடன் (barter system) தொடர்புடைய முக்கிய குறைபாடுகளை இனங்கண்டு விளக்குக. **(03 புள்ளிகள்)**

**ii.** பணத்தின் தொழிற்பாடுகளை இனங்காணும் அதேவேளை, பணத்தின் அறிமுகமானது பண்டமாற்று முறையின் குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு எவ்வாறு உதவுகிறது என்பதை விளக்குக. **(04 புள்ளிகள்)**

**iii.** 'குறுகிய' (Narrow) மற்றும் 'பரந்த' (Broad) பண நிரம்பலை வேறுபடுத்துக. **(03 புள்ளிகள்)**

**B) i.** வணிக வங்கிகளின் (Commercial Banks) சில முக்கிய தொழிற்பாடுகளை இனங்காண்க. **(04 புள்ளிகள்)**

**ii.** ஒதுக்கீட்டுத் தேவையைப் (reserve requirement) பூர்த்தி செய்தல் வணிக வங்கிகளின் பணத்தை உருவாக்கும் திறனை எவ்வாறு பாதிக்கும்?
வணிக வங்கிகள் பணத்தை உருவாக்குவதில் உள்ள முக்கிய கட்டுப்பாடுகளை இனங்காண்க. **(06 புள்ளிகள்)**

**<u>வினா இல. 05</u>**

**A) i.** முதலீடு – சேமிப்பு (Investment – Saving "IS") மற்றும் பணப்புழக்க முன்னுரிமை - பண நிரம்பல் (Liquidity Preference – Money Supply "LM") கோடுகள் எதனைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன? **(03 புள்ளிகள்)**

**ii.** "IS" வளையி ஏன் எதிர்மறைச் சரிவைக் (negatively sloped) கொண்டுள்ளது? விளக்குக. **(02 புள்ளிகள்)**

**B)** பொருளாதாரத்தில் பின்வரும் மாற்றங்கள் ஏற்படுத்தும் தாக்கத்தை IS/LM கட்டமைப்பைப் (IS/ LM Framework) பயன்படுத்தி விளக்குக.

**i.** முழு வேலைவாய்ப்பை அடைவதற்காக அரசாங்கம் விரிவாக்க நிதிக்கொள்கையை (Expansionary Fiscal Policy) அறிமுகப்படுத்தியுள்ளது.

**ii.** மத்திய வங்கியானது வணிக வங்கிகளின் ஒதுக்கீட்டுத் தேவையை (reserve requirement) குறைத்துள்ளது.

**iii.** பொருளாதாரத்தின் சராசரி விலை மட்டம் குறைவடைந்துள்ளது.

**iv.** பொருளாதாரத்தில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக மிகவும் கடுமையான கடன் கொள்கை பயன்படுத்தப்பட்டுள்ளது. **(10 புள்ளிகள்)**

**C)** பணத்திற்கான கேள்வி வட்டி வீதத்தில் தங்கியிருக்காத போது, ஒரு பொருளாதாரத்தின் வருமான மட்டத்தை அதிகரிப்பதற்கான மிகச் சிறந்த கொள்கைகள் யாவை?
விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்குக. **(05 புள்ளிகள்)**

**வினா இல. 06**

**A)** **i.** 'கேள்வித் தூண்டல் பணவீக்கம்' (Demand Pull Inflation) மற்றும் 'செலவுத் தூண்டல் பணவீக்கம்' (Cost Push inflation) ஆகியவற்றை விளக்கப்படங்களைப் பயன்படுத்தி விளக்குக. **(05 புள்ளிகள்)**

**ii.** பிரதான வர்த்தகப் பங்காளர்களுக்கு எதிராக உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடைதல் (depreciation) கொடுக்கப்பட்ட உள்நாட்டுப் பொருளாதாரத்தின் சராசரி விலை மட்டத்தை எவ்வாறு பாதிக்கலாம்? இலங்கை பொருளாதாரத்தை உதாரணமாகக் கொண்டு விளக்குக. **(06 புள்ளிகள்)**

**B)** பின்வருவனவற்றை வேறுபடுத்துக:

**i.** மையப் பணவீக்கம் (Core inflation) மற்றும் முதன்மைப் பணவீக்கம் (Headline inflation).

**ii.** எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கம் (Anticipated inflation) மற்றும் எதிர்பார்க்கப்படாத/ திடீர் பணவீக்கம் (Unanticipated inflation). **(06 புள்ளிகள்)**

**C)** அதிகரித்த பணவீக்கமானது கொடுக்கப்பட்ட நாட்டின் சமூகத்தின் மிகக் கீழ்மட்டத்திலுள்ள மக்களை எவ்வாறு பாதிக்கும்? விளக்குக. **(03 புள்ளிகள்)**

**- முழு பதிப்புரிமையுடையது -**